



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20–1–2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2– வது மாநில மாநாட்டையொட்டி முரசொலி மாறன் அரங்கத்தில் கழக இளைஞர் அணி சார்பில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினார்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக இளைஞரணியினர், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டையொட்டி, திராவிட இயக்க வரலாற்றை விளக்கும் 1500 டிரோன்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்ட பிரம்மாண்ட டிரோன் வண்ண ஒளி நிகழ்ச்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2–வது மாநில மாநாட்டையொட்டி கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட, இருசக்கர வாகனப் பேரணியானது, “மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் இருசக்கர வாகன பேரணி மாநாட்டு பந்தலை வந்தடைந்ததை பார்வையிட்டார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும். நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா. அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (20.1.2024) சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2– வது மாநில மாநாட்டையொட்டி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்களால் வழங்கப்பட்ட மாநாட்டு சுடரை கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோ டிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.